கிறார்கள். இந்த நிலையைக் கல்வியமைச்சர் அவர்கள் அறிவார்கள். முதலமைச்சர் அவர்களுடைய சந்திரமோகன், நீதிதேவன் மயக்கம் என்ற நாடகங்களை நான் பார்த்திருக்கிறேன். அதிலே இந்தக் குறைபாடுகளைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் வெறும் நாடகமாக இல்லாமல் நல்ல பலன் தரத்தக்க அளவுக்கு மக்களுக்கு வாக்களித்தது போல் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய அமைச்சர்களில் பெரும்பகுதியின் தஞ்சை மாவட்டத்தின் கிராமப் புறங்களைப் பற்றி அறியாதவர்களாக இருக்க முடியாது. ஏழைத் தொழிலாள மக்களுக்கு அன்றாடப் பிரச்சினைகளிலேயே பல கஷ்டங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நீக்குவதற்கு வழி செய்ய வேண்டும். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரை விவசாயத் தொழிலாள மக்களுடைய குத்தகைதாரர் சட்டத்தை ஆய்ந்து பார்த்து பரிசீலனை செய்து திருத்தி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்று கூறி, இந்தச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: நண்பர் அவர்கள் நிலப் பிரச்சினையைப் பற்றிப் பேசிக் கொண்டு வந்த தொடர்பில் என்னுடைய இரண்டு நாடகங்களைப் பார்த்ததாகச் சொன்னார்கள். அந்த இரண்டு நாடகங்களிலும் நிலப் பிரச்சினை இல்லை. நிலப் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிற நாடகம் 'சந்திரோதயம்' என்னும் நாடகம். அதனை நண்பர் காண்பதற்கேற்ற முறையில் மறுபடியும் நடிப்பதற்கில்லையே என்று வருந்தப்படுகிறேன். அவர்கள் பார்க்காத நாடகத்தைப் பற்றி இவ்வளவு அழகாக விமர்சனம் செய்ததற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

1. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) கவர்னர் பேருரைக்கான நன்றியறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் கொடுத்தல்

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இன்றைய கூட்டம் முடிவடைவதற்கு முன்பு சில அறிவிப்புகளை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியதாக இருக்கிறது.

கவர்னர் அவர்களின் பேருரைக்கான நன்றி அறிவிப்புத் தீர்மானத்திற்குத் திருத்தங்கள் (**Amendments**) கொடுக்க விரும்புகிறவர்கள், அத்திருத்தங்களைச் சட்டப் பேரவைச் செயலாளரிடம் 20—3—1967 திங்கட்கிழமை நன்பகல் 12 மணிக்குள் கொடுக்க வேண்டும்.

(உ) அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானங்கள்

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேறிய